E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

# ந. சுப்புரெட்டியாரின் *பல்சுவை விருந்தின்* சுவைகள்

## N.Subbu Reddiar's Eruditeness in his *Palsuvai Virundhu*

**முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.
**Dr. R. Vishnupriya,** Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6929-8162**
**DOI: 10.5281/zenodo.7275528**

### Abstract

*Prof. N. Subbureddiyar has written several multidimensional works. "Palsuvai Virundhu", the work comprises thirteen parts which include his popular speeches and writings. He deals profoundly into the insight into the theme of caste through his book which is also evident in "Tolkaapiyam" but it never recognises the people directly. Most of the streets are named after the caste. The street name will be perfected when the caste is removed from it. He rightly quotes the words of Thirumoolar - "Ondrey Kulam Oruvaney Devan" as the remedy for the radical change in the society. He considers the work of Thiruvalluvar as a fantabulous work for real life. Subbu Reddiar suggests the reader learn the couplets by using their hearts instead of their minds which is abundantly more than the taste of chocolate and the energy of vitamin capsules. The author thinks that there are 1330 pearls in the room of 133 shells. According to him, "Thirukkural" is the only wealth for human beings in their life. He shares information from medicine, and science and insists to develop research centres for diagnosing the cause and effects of diseases. He has guided how to write history and feels dejected about the new Poets' portrayal of contemporary issues in society through their poetry. Hence, he compares these new poets' views on society with that of the eagle's view. The research paper delineates the varied thoughts on the exposure of the path of Kamaraj, Rajaji, Ramanujar and Periyar as the right path for a good life.*

**Keywords:** Casteism, Science, Ethics, Social thoughts, *Palsuvai Virundhu.*

### ஆய்வுச்சுருக்கம்

*பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் எண்ணற்ற பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் "பல்சுவைவிருந்து" என்னும் இந்நூல் 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிலைகளில் தாம் பேசியதும், எழுதியதுமான, பல சொற்பொழிவுகளை இந்நூலில் வடித்துக் கொடுத்துள்ளார். இந்நூலில் சாதி பற்றிய கருத்தினை ஆழமாகப் பேசுகின்றார். சாதி என்னும் சொல் தொல்காப்பியத்திலேயே காணப்பெறினும், அச்சொல் ஓரிடத்திலும் மக்களைக் குறிப்பதாக இடம்பெறவில்லை என்பதோடு, சாதியின் பெயரால் ஆதாயம் தேடுபவர்களை ஒழிக்க வேண்டும் என்றும், குறிப்பிடுகின்றார். நாட்டில் உள்ள பல தெருக்கள் சாதியின் பெயரால் இருப்பதையும், அச் சாதியின் பெயரை நீக்கினால் தெருப்பெயர் தெருவில் தான் நிற்கும் என்றும் வலியுறுத்துகின்றார். இச்சாதியினை அரசே வளர்க்கின்றது என்ற நிலை*

*மாறி சமூகத்தில் மாற்றம் ஒன்று நிகழவேண்டுமானால், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் வாக்கையே சிறந்த மருந்தாகக் கையாள வேண்டும் எனப் பதிவிடுகின்றார். வள்ளுவப்பெருந்தகையின் நூலை வாழ்க்கைக்கான நூலாகப் பார்க்கின்றார். திருக்குறளை மூளை கொண்டு கற்காமல் இதயம் கொண்டு கற்க வேண்டும் என்று குறிப்பிடுவதோடு, அதில் மிளகு மிட்டாயின் சுவையும், வைட்டமின் மாத்திரையின் ஆற்றலும் பெருகி இருப்பதாக வடிவமைக்கின்றார். 133 அதிகாரங்களை உடைய அறைகளில் அழகான 1330 குறள் மணிகள் இருப்பதாக எண்ணுகின்றார்.ஒரு மனிதன் பெரும் நுட்பமும், புலமையும் பெற்று விளங்கிட வாழ்விற்குச் செல்வமாக இருப்பது இந்நூல் ஒன்று மட்டுமே என்பதைத் தமது எண்ணமாகக் கொண்டுள்ளார். அறிவியலில் ஆழங்கால் பட்டவராக விண்வெளியை ஆய்ந்தும், அங்கு செல்ல வேண்டிய உடை, உணவுமுறை, சுவாசிக்கும் முறை போன்றவற்றையும், ஒரு மருத்துவ அறிஞராக நமது உடலில் ஏற்படும் ஒவ்வாமையின் நிலை குறித்தும் எடுத்துரைக்கின்றார். எந்த நோயானாலும், அந்நோயின்தன்மை, தீவிரம், முதலியவற்றை ஆய்ந்தறிய நம்பகமான ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பெற வேண்டும் என்பதிலும், முழு சிந்தனை உடையவராக இவ் ஆசிரியர் இருக்கின்றார். தன்வரலாறு, வாழ்க்கைவரலாறு, மொழிவரலாறு, எனப் பல வரலாறுகள் இருந்தாலும் வரலாறு எழுதுவது எப்படி என்று வழிப்படுத்துவதில் ஒரு நெறியாளுகைத் தன்மையும் இவரிடம் காணமுடிகின்றது. சமூகத்தில் ஏற்படும் வறுமை, ஆட்சிமுறை, காதல், சுதந்திரம், வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி, கடத்தல், கலப்படம், கையூட்டு, கல்வியின்நிலை, குடிப்பழக்கம், சமூகப் பொறுப்பின்மை, அறியாமை எனப் பலவற்றையும் புதுக்கவிஞர்களின் கவிதைகளில் கண்டு மனங் கலங்குகின்றார். கவிஞர்கள் சமூகத்தின் மீது பார்க்கும் பார்வையை கழுகுப்பார்வைக்கு ஒப்பாகப் பார்க்கின்றார்.காமராசர், இராஜாஜி, இராமானுஜர், பெரியார் போன்ற அறிஞர்களின் பாதையை வாழ்க்கைக்கான பாதையாகக் கொள்ள வேண்டும் என்ற பல்வேறு சிந்தனைகளைச் சுவைக்கும் விதத்தில் இவ் ஆய்வுக் கட்டுரை இடம் பெற உள்ளது.*

**குறிப்புச்சொற்கள்**: சாதியம், அறிவியல், அறவியல், சமுதாயச்சிந்தனைகள், *பல்சுவைவிருந்து.*

**முன்னுரை**

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் 'பல்சுவைவிருந்து' என்னும் நூலில் சாதி மத பேதங்களை அறவே ஒழிக்க வேண்டும் என்றும், அதற்கு மக்கள் அறமுடனும், அன்புடனும் வாழ வேண்டும் என்றும் எடுத்துரைக்கின்ற கருத்துக்களையும், அற நூல்களில் ஒன்றான திருக்குறளின் கருத்துக்களைப் பின்பற்றி தமது நூலில் வெளியிட்டுள்ள தன்மையினையும், புதுக்கவிதைகளின் தோற்றம், அவற்றின் நடை குறித்தும், வான்வெளியின் பயணம், உடலுக்கு

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ் 

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

உண்டாகும் ஒவ்வாமைகள், வரலாற்றின் முக்கியத்துவம் போன்றவற்றையும் உள்ளடக்கியதாக இக்கட்டுரை அமைந்து நிற்கின்றது.

**சாதியம்**

இன்றைய கணிப்பொறி யுகத்திலும் மாந்தர்களைக் கட்டிப்போட்டு நிற்கும் தன்மை உடையது ஒன்று உண்டு எனில் அது சாதியே ஆகும். இன்றைய சமுதாயம் சீர்கெட்டு நிற்பதற்கு அடிப்படையாக விளங்குவது சாதி மத வேற்றுமையே எனலாம். இதை அடியோடு ஒழிக்க வேண்டுமெனில் நமது அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் பொது நலத்துடன் ஒன்றுபட்டாலே சாதி என்ற சொல்லை தமிழ் அகராதியில் இருந்து நீக்கிவிடலாம் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் போன்ற பிரிவுகள் குலத்தால் தோன்றியவை அல்ல தொழிலால் ஏற்பட்டவையே என்ற தொல்காப்பியர் கருத்தினையும்,

**பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான் (குறள். 972)**

என்ற திருக்குறளின் கருத்தினையும் அடியொற்றி பிறப்பினால் சாதிப்பிரிவு தோன்றவில்லை, செய்கின்ற தொழில் வேற்றுமையால் தான் சாதிப்பிரிவு தோன்றியிருக்கும் என்றும் இவ்ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

**நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே (தொல், நூ. 1542)**
**நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய (தொல், நூ. 1563)**

போன்ற இடங்களில் வரும் சாதி என்னும் சொல் நீரில் வாழும் உயிரின்நிலையைக் குறிக்கின்றதே அன்றி, மக்களைச் சுட்டவில்லை என்பதையும் இங்கு காண முடிகின்றது.

**தெருக்கள்**

சாதியின் பெயரில் உள்ள தெருக்களின் பெயரை நீக்க வேண்டும் என்றும், முதலியார் தெரு, செட்டித்தெரு, அய்யர்தெரு, போன்ற தெருப் பெயர்களின் முன் இடம்பெற்றுள்ள சாதியின் பெயரை நீக்கினால் தெருப்பெயர் தெருவில் தான் நிற்கும். அதோடு மக்கள் புதிதாக ஒரு சாலையினைத் தேடி வரும்போது குழப்பமும் ஏற்படும்.இதற்கு ஒரேவழி அரசு வாக்காளர் பட்டியலில் உள்ள சாதிப்பெயர்களை நீக்குவதுதான் சிறந்தது என ஆசிரியர் கூறுகின்றார். இன்னும் பல இடங்களில் இப்பெயர்முறை வழக்கில் தான் உள்ளது. சமூகத்தில் சாதி ஒழிப்புக்கு முழுமையான அரசாணை இன்னும் வெளி வராதது வருத்தத்திற்கு உரியது எனலாம்.

**கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டு பண்ணப் பிறந்தது அல்ல மதம் அமைதியைக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது அது. மதம் மனிதர்களைப் பிடிப்பதற்காக**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

**உண்டாக்கப்படவில்லை மனிதர்களை ஒன்றுபடுத்துவதற்காகவே ஏற்பட்டது தான் அது (வெற்றியைநோக்கி, ப. 71)**

முனைவர். தி. செல்வநாயகியின் கருத்தை அறியமுடிகின்றது. இதிலிருந்து சாதி என்னும் சொல்லின் கருத்தை நாம் உணர முடின்றது. வள்ளல் பெருமானும் ஜாதியை வெறுத்துப் பேசுகையில், *ஜாதி சமயங்களிலே வீதி பல வகுத்த சாத்திரக் குப்பைகள்* (திருவருட்பா திரட்டு, ப. 265) என்று கூறுகின்றார். தன் முகத்தில் தானே பூசிக்கொண்ட கரியாய் சாதி விளங்குகின்றது என்பதை இங்கு அறியமுடிகின்றது

**சாதியும் பெயர்முறையும்:**

ஒரு குறிப்பிட்ட நபரை நாம் அழைக்கும் பொழுது 'வாருங்கள் முதலியார்வாள்', 'வாருங்கள் அய்யர்வாள்' என்று சாதியின் பெயரைத் தம் பெயருடன் சேர்த்துச் சொல்லும் வழக்கம் முன்பு பெருவழக்ககாக இருந்ததை ஆசிரியர் பதிவிடுகின்றார். ஆனாலும் இவ்வழக்கம் முழுமையாக இன்று மறைந்துவிடவில்லை எனலாம். சில இடங்களில் இன்னும் இத்தன்மை காணப்பெறுகின்றது. இன்றும் கொங்கு நாட்டில் வேலைக்குச் செல்லும் அரிஜன மக்களிடம் 'பெரியகவுண்டர் வந்துட்டாரா', 'சின்னக்கவுண்டர் வந்துட்டாரா', என்று சாதியின் பெயரைச் சொல்லி அழைக்கும் வழக்கத்தைக் காணமுடிகின்றது. பாட்டுக்கொரு புலவன் பாரதியும்,

**ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்**
**…வேறு குலத்தினராயினும் ஒன்றே (பாரதியார் கவிதைகள், ப. 122)**

என்றும்,

**சாதி மத பேதங்கள் மூடவழக்கங்கள்**
**தாங்கி நடைபெற்று வரும் சண்டையுலகிதனை**
**ஊதையினில் துரும்புபோல் அழைக்கிப்போம் - பின்னர்**
**ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்**
**பேதமில்லா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்**
**பேசு சுயமரியாதை உலகு எனப்பெயர் வைப்போம் (பாரதிதாசன் கவிதைகள், ப. 28)**

பாரதிதாசன் கருத்தையும் இவ் ஆசிரியர் ஏற்கின்றார். சாதி அடிப்படையில் மாணவர்களுக்கு இடஒதுக்கீடு செய்தல், பேராசிரியர்களை நியமித்தல், என சாதி வாரியாக அனைத்தும் இன்று நடைபெறுகின்றதை நாம் காண முடிகின்றது. ஒன்றே குலம் ஒருவனே தேவன், சாதி ஒழிப்புஎன்னும் இரண்டு தலைப்புகளில் சாதியின் தன்மையை இவர் விளக்குகின்றார். பகுத்தறிவு விழியால் குலம் என்பது ஒன்றே அது மனிதகுலம் மட்டுமே என வரையறை செய்கின்றார். மேலும் சாதி என்பது இயற்கையன்று, அது செயற்கையானது. என்கின்றார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

காளை புணர்ந்து எருமையில் கரு உண்டாவதில்லை, எருமை புணர்ந்து பசுவிடம் கரு உண்டாவதில்லை. பெற்றமும், எருமையும் பேதமாய்த் தோன்றல் போல மாந்தரில் பேதம் காண முடியாது என்கின்றார். சாதி வேறுபாடும், இனவேறுபாடும் இன்றி சமுதாயம் அன்பால் தலைத்தோங்கும் நாளே வாழ்வின் பொன்நாள் என்பதை இவரது கருத்துக்கள் வலியுறுத்துகின்றன.

**சாதிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய வழி மேலே உள்ளவர்களைக் கீழே இழுப்பது, என்பதல்ல கீழே உள்ளவர்களை மேல்நிலைக்கு உயர்த்துவது தான் (சுவாமிவிவேகானந்தரின் பொன்மொழிகள், ப. 12)**

என்ற சுவாமிவிவேகானந்தரின் சிந்தனையைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். இதன்வழி பின்தங்கியுள்ள மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற கருத்தாக்கத்தைக் கற்ற முடிகின்றது.

**உயிர் குடித்த இனக்கலவரம்**
**முடிந்த பின்பும் உயிரோடு**
**ஜாதி வெறி (பொன் விழா ஹைக்கூ, ப. 141)**

அரசு சாதியின் பெயரில் இன்று வெறி கொண்டு கட்சிகளை வளர்க்கின்றது என்ற கருத்தை கவிஞர் வீரபாண்டியன்.வலசை கூறுகின்றார். இன்று மக்கள் சாதியால் ஒட்டைச் சேர்க்கின்றனர். அதனைச் சினிமா படம் பிடித்து இலாபம் அள்ளுகின்றது. பார்ப்பவன் மட்டுமே ஏமாளி ஆகின்றான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வெளிநாட்டில் வாழுகின்ற மக்களிடமும் சாதிவெறி சூழ்ந்துள்ளது என்பதற்கு கீழ்க்காணும் செய்தி சான்றாகும்.

**புலம்பெயர் மக்கள் இதுவரை கண்டிராத பரிச்சயமில்லாத நாடுகள் என எங்கே சென்றாலும் தமிழர்களின் இரத்தத்திலேயே ஊறிப் போனதாகக் கருதுகிற சாதியத்தைக்கைவிடாமல் பிடித்தே வைத்திருக்கும் அவல நிலையானது இன்றளவும் காணப்படுகிறது.(போதி, பன்னாட்டு ஆய்விதழ், ப. 25)**

சாதியின் வேறுபாட்டிற்கு மூலகாரணம் கடவுள்என்று கருதி அதனை முதலில் ஒழிக்க வேண்டும் என்ற பெரியாரின் சிந்தனையை இவர் பின்பற்றுகின்றார்.

**மனிதர்கள் உலக வாழ்வில் முழுமை அடைய வேண்டுமெனில் தனிமனித ஒழுக்கமும், சமூக ஒழுக்கமும் அவசியமாகும். தனி மனிதனிடம் மாற்றம் ஏற்படுமானால் சமூகமும் மாற்றம் பெறும். மனிதனிடம் காணப்படும் வக்கிர எண்ணங்கள் வன்முறையாக மாறுகிறது. இதனால் மனித இனத்தின் மீது மனிதன் தாக்குதல் நடத்துகிறான் (செம்மொழித்தமிழ், தமிழிலக்கியத்தில் மனித நேய மாண்புகள், ப. 359)**

இதன்மூலம் சமூகத்தின் நிலையை அறியமுடிகின்றது.

**வள்ளுவமும் அறவியலும்**

உலகில் வாழுகின்ற பல உயிரினங்களில் தலைசிறந்தது மனித இனம் மட்டுமே.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

ஏனெனில் பிற வகை உயிரினங்கள் தாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டுஉண்டும், உறங்கியும், தம் இனத்தை இனவிருத்தி செய்துகொண்டு காலங்காலமாக ஒரே மாதிரியான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றன. மனிதன் மட்டுமே இவற்றில் இருந்து வேறுபடுகின்றான். தனது அறிவைப் பெருக்கி வாழ்வை அழகாக வடிவமைக்கின்றான். தனக்கும், தனக்குப் பின் தோன்றுகின்ற சந்ததியினருக்கும், சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை நடத்தக் கற்றுக் கொடுக்கின்றான். எப்படி வாழ வேண்டும், எவ்வாறு இருக்க வேண்டும் என்று தான் உணர்ந்த அனுபவங்களை நூல்களாக வடிவமைக்கின்றான். பண்பாட்டைப் புகட்டுகின்றான். அவ்வகையில் வள்ளுவரின் திருக்குறள் அறக்கருத்துக்களை உணர்த்துவதில் முதன்மை பெற்று நிற்கின்றது. பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள், பல்சுவைவிருந்துஎன்னும் இந்நூலில் வழிகாட்டும் வள்ளுவம், வாழ்வுச்செல்வம்என்ற இரண்டு தலைப்புகளில் திருக்குறளின் சிறப்பை எடுத்துரைக்கின்றார். வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறத்தையும், பண்பையும், கல்வியையும், இவர் வலியுறுத்துகின்றார்.

**நூலினைச் சுவைத்தல்**

நீதி நூல்களில் ஒன்றான திருக்குறளை ஏதாவது ஒரு நூல்வகையில் சேர்த்துக் கொள்ள முடியாது. அதில் சொல்லாத பொருளே இல்லை என்று கூறி அந்நூலை இரண்டு வகைப்படுத்துகின்றார். ‘திருவள்ளுவர் உலகமுழுதும் அறிவியக்கம் பரவ விழைந்த அறவோர்’ (கற்பித்தலில் புதிய உத்திகள், ப. 1) என ச.செந்தில்குமார் குறிப்பிடுகின்றார். ஒன்று தம் காலத்திற்கு நம்மை அழைத்துச் சென்று மகிழ்ச்சியூட்டும். இரண்டாவது வகை நம் காலத்திற்குத் தான் வந்து உதவும். இதில் இந்நூல் இரண்டாவது வகையைச் சார்ந்தது என ஆசிரியர் புகழ்கின்றார். சாக்கரின் என்ற பொருள் வாயில் போட்டால் முதலில் கசக்கும். அதையே நீரில் கரைத்துப் பருகினால் தித்திக்கும். திருக்குறளும் மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு விளங்காது. ஆழ்ந்து நோக்கும் போது அதன் புலமை வெளிப்படும் என்றும், மிளகு மிட்டாயின் சுவைக்கும், ஊட்டச்சத்து மாத்திரைக்கும் ஒப்பாகப் பேசுகின்றார். திருக்குறளை உயிர்ப்புடன் மனதில் சுவைக்கின்றார். பிடிக்காத பொருள் தனக்கு எவ்வளவு கிடைத்தாலும் சுவைக்காது, இனிக்காது, அதுவே மனதிற்கு பிடித்தால் அமிழ்தினும் சுவை கூடும் என்பதை ஆசிரியரிடம் காணமுடிகின்றது.

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல் (குறள். 200)**

என்ற வள்ளுவரின் வாக்கை இவரது நூலில் காணலாம்.

**நூலின் சாரத்தைப் பின்பற்றுதல்**

திருக்குறளில் உள்ள கருத்துக்களைப் பலர் தமது நூல்களில் எழுதியுள்ளனர். காப்பியங்களிலும், பின்னர் எழுந்த பல நூல்களிலும் திருக்குறள் பேசப்படுகின்றன. இதற்குச்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

சான்று பல ஆசிரியர் பகர்கின்றார். ஒரு தாய் தன் குழந்தையைப் பெற்றதை விட அவனைச் சான்றோன் எனப் பிறர் கூறுவதிலேயே மிகுந்த மகிழ்ச்சியைக் காண்கின்றாள். இக்கருத்தையே கம்பரும் பின்பற்றுகின்றார், தன் மகனால் தசரதனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியை,

**மற்று அவன் சொன்ன / வாசகங் கேட்டலும் மகனைப்**
**… உற்ற அன்றினும்**
**பெரியதுஓர் உவமையன் ஆனான் (கம்பராமாயணம், பா. 1354)**

என்று குறிப்பிடுகின்றார். இது போன்று பலரும் வள்ளுவரின் கருத்தைப் பின்பற்றியுள்ளதைப் பல பாடல்களில் இவர் எடுத்துரைக்கின்றார்.

**திருக்குறள் தேசிய இலக்கியமாக அறிவிக்கப்படுமானால் பாரதத்திற்கு அது நிச்சயமாக பெருமிதத்தைச் சேர்க்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை (தேசிய இலக்கியம் திருக்குறள், ப.12)**

என்று டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களும் திருக்குறளின் பெருமிதத்தைக் குறிப்பிடுகின்றார். இன்ன துறை என்று இல்லாது எல்லாத் துறையினருக்கும் பொருந்தும் தன்மையுடையது இந்நூல். இன்று பலர் அந்நூலுக்குப் பொருளை உரையாக எழுதுகின்றோம் என்ற பெயரில் கருத்தையே மாற்றி எழுதுவதை எண்ணி ந. சுப்புரெட்டியார் வருத்தமடைகின்றார். தற்போது அமெரிக்காவில் விர்ஜினியா மாகாணத்தில் உள்ள பேர்பேக்ஸ் பகுதியில் முதல்முறையாக ஒரு சாலைக்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் Valluvar Way என்றும் தமிழில் 'வள்ளுவர் தெரு'என்றும் இந்த சாலை அழைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், மக்களுக்காகப் பணி செய்த காமராசர், தனது சுக துக்கங்களை ஒன்றாகக் காணும் பக்குவம் பெற்ற இராஜாஜி, சமத்துவத்தை நிலை நிறுத்திய பெரியார், மக்களுக்காகத் தன் வாழ்வை இழக்க நினைத்த இராமானுஜர், போன்ற சான்றோர்களின் வாழ்வை உயிரினும் மேலானதாக இவர் பார்க்கின்றார்.

**உடல் ஒவ்வாமை**

உடலில் விநோதமாக எழும் (Allergy) நிலையை நுட்ப ஊற்றுணர்வு என்று குறிப்பிடுகின்றார். சிலர் சில பொருள்களை ஏற்கும் போது அவர்களது உடல் அதற்கு எதிர்வினை புரிதலே ஒவ்வாமை எனப்படும். இதனால் தீங்கு கிடையாது என்பர். இன்று பலரும் இந்நோயால் பாதிக்கப்படுவதைக் காண்கின்றோம். உதாரணமாக மகளிர் மாதவிடாயின் போது ஏற்படும் தலைவலி கூட ஒவ்வாமையின் ஒருநிலையே ஆகும். ஹார்மோனின் செல்வாக்கு இதற்கு உண்டு என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முறையான மருத்துவமும், ஆய்வு மையங்களும் சரியான முறையில் இருந்தால் உயிர் இழப்பைத் தவிர்க்கலாம் என்பது பேராசிரியரின் கருத்தாகும். சிலர் அரிப்பு ஏற்படும் போது அது ஒவ்வாமையின் செயல்பாடு என்று கூறி புளிப்புச் சுவையைத் தவிர்க்கின்றதையும் நாம் பார்க்க

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

முடிகின்றது. தூசு, சளி போன்றவையும் ஒவ்வாமைக்குள் இடம்பெறுகின்றன. நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும் என்பதை இக்குறள் உணர்த்துகின்றது. ஒவ்வாமை முதற்கொண்டு உலகில் உள்ள அனைத்து நோயிற்கும் இது பொருந்தும். உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாத எதுவாக இருப்பினும் ஒவ்வாமை எனப்படும்.

> **ஒவ்வாமை என்பது மனித உடலின் நோய்த் தடுப்பாற்றல் அமைப்பில் உண்டாகும் கோளாறினால் ஏற்படும் ஒரு நிலையாகும். சூழலில் இருக்கின்ற சில ஒவ்வாப் பொருட்களால் ஒவ்வாமை ஏற்பட வாய்ப்பு உண்டு” (https://ta.m.wikipedia.org)**

என்று இணையதளத்தின் வழியும் இதனை அறிய முடிகின்றது. இவ்ஒவ்வாமைக்கான பல விளக்கங்களை ந.சுப்புரெட்டியாரின் கருத்துக்கள் விளக்குகின்றன.

**விண்வெளிப்பயணம்:**

வானை உயர்ந்து பார்த்து நிலாவினை ரசித்த மனிதன் இன்று நிலாவிற்குள் கால் வைக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கின்றான். எதையும் மனக்கண் கொண்டு பார்த்தவன் இன்று அறிவியல் ரீதியாக ஒன்றைச் சான்றுடன் காட்சிப்படுத்தும்போதே நம்புகின்றான். ஒரு காலத்தில் வீட்டிற்குள் முடங்கிய பெண்கள் கூட இன்று விண்வெளிக்குச் சென்று ஆராயும் அளவிற்கு வளர்ந்துள்ளனர். இந்தியாவில் விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்ணாக நாம் கல்பனாசாவ்லாவைக் காணமுடியும். விண்வெளியை விண்வெளிச் செலவுத்துறைஎன்ற சொல்லால் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். அறிவியலில் ஆழங்கால் பட்டவராக, புலமை மிக்கவராக இருப்பதற்கு உதாரணமாக இங்கு ஒன்றைச் சுட்டலாம். ஈயத்திற்குக் கதிர்வீச்சினைத் தடுக்கும் தன்மை உடையது என்றும், அதனால் இராக்கெட்டின் உள்ளே பல அடுக்குகள் ஈயத்தகடுகளால் பொருந்தியிருக்கும் என்பதையும் இவர் பதிவிடுவதன் வழி அறிய முடிகின்றது. “அறிவியல் என்பது தத்துவம் அதன் வெளிப்பாட்டுத் தூல வடிவமே தொழில் நுட்பம்” (கவிதைகளில் அறிவியல், ப.3) என்று நெல்லை சு.முத்து அவர்கள் குறிப்பிடுகின்றதை நோக்கும்போது, இவர் ஒரு தத்துவவாதியாக, அறிவியல் ஞானியாக ஆய்ந்திருப்பதைக் காண முடிகின்றது. ”குணங்களின் பெருமைக்கும் குற்றங்களின் சிறுமைக்கும் உரைகல் அவரவர் செயல்களே” (வள்ளுவர் வகுத்த வாணிபம், ப.75) என்றடாக்டர், நல்லி குப்புசாமி செட்டியாரின் வரிகள் இதற்கு அடிப்படையாகின்றது.

**வான்வெளியில் உணவு**

விண்வெளிக்குச் செல்பவர்கள் சத்தான, சுவையான உணவை எல்வோரும் உட்கொள்வது போல உட்கொள்ள முடியாது. அவர்கள் உலர் பழங்களையும், திரவ நிலையில் உள்ள பொருள்களையுமே உணவாக உடகொள்ள முடியும். புவியீர்ப்பு விசை இல்லாத காரணத்தினால் இப்பழங்களைச் சாப்பிடுவது என்பது ஒரு சவால் ஆகக் கருதப்படுகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

வாய்க்கட்டுப்பாடு விண்வெளிக்குச் செல்ல மிக அவசியம். சாப்பாட்டின் மீது ஈடுபாடும், சுவையும் கொண்டவர்கள் இதைச் சமாளிப்பது கடினம் ஆகும். அங்கு செல்லும்பொழுது தண்ணீரை உறிஞ்சிக்குடிக்க வேண்டும், பானங்கள் நீண்ட குழாயுடன் பொருந்தி இருத்தல், வேண்டும். உணவு பசை வடிவில் இருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது உணவு கெடாமல் இருக்கவும், புதுவகையான உணவுகளைச் சேர்ப்பதிலும் பல ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருவதைப் பார்க்க முடிகிறது.

**விண்வெளி உடை**

ஒரு மனிதனுக்கு ஆடை வளர்ச்சியாக உடலை மறைக்க பயன்பட்டது. 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்'என்று சொல்லும் அளவிற்கு ஆடையின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்றதுள்ளது. குளிர், மழை, வெயில் என காலத்திற்கு ஏற்றாற்போல் மனிதன் ஆடையை வடிவமைத்தான். பாம்பின் சட்டையினைப் போல, பாலின் ஆடையைப் போல, புலியின் தோலினைப்போல ஆடைகளை வடிவமைத்தான். இன்று விண்வெளிப்பயணத்திற்கென பல ஆடைகள் உற்பத்தியாகின்றன. ஆடைகள் எவ்வாறு இருக்கும் என்பதை ஆசிரியர் குறிக்கும் இடத்து அவை இரு உறைகளாலான இரப்பர் சேர்ந்த நைனாலானது. உடல் முழுவதும் ஆடை மூடப்பட்டிருக்கும். வியர்வை துர்நாற்றம் போன்றவற்றை வெளியேற்றும் வசதிகள் அதற்கு உண்டு உடலைச் சுற்றித் தேவையான காற்றழுத்தம் இருக்குமாறு அவ்ஆடை அமைக்கப் பெற்றிருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

> **மனிதனின் அத்தியாவசியமான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்று அம்சங்களில் புதிய ஒன்று நான்காவது இடத்தைப் பிடித்துக்கொள்வதால் சமூகம் பெற வேண்டிய புதிய அம்சங்களின் அறிவாக விஞ்ஞானம் இருக்கிறது. (இலக்கியம் விமர்சன சிந்தனைகள், ப.205)**

என்று பொன்மணி அவர்கள் குறிப்பிடுகின்றார். இன்று அரசாங்கம் விண்வெளி ஆராய்ச்சிக்கென்று அதிகப் பணத்தைமுதலீடு செய்கின்றது. உதாரணமாக,

> **ஒரு விண் உடையைத் தயாரிக்க 12 மில்லியன் முதல் 15 மில்லியன் டாலர்களுக்கு (இந்திய மதிப்பில்92 கோடி முதல் 114 கோடி வரை) மேல் செலவிடுகிறது நாசா"(https://ta.quora.com December 2018)**

என்ற தகவலை இணையத்தின் வழி அறியமுடிகின்றது.

**சுவாசிக்கும் முறை:**

ஒருவர் தமது உடலை ஓம்ப வேண்டுமெனில் தவம், யோகம் போன்றவற்றைத் தினம்தோறும் செய்ய வேண்டும். அதனால் மனம் பக்குவம் அடையும். ஓசோன் வாயு நிறைந்த காலைப் பொழுதில் இப்பயிற்சிகள் செய்ய நற்பயனை விளைவிக்கும். இரத்த ஓட்டத்தைச் சீராக்கும் தன்மையும் இதற்கு உண்டு. விண்வெளிக்குச் செல்ல இம்மூச்சுப் பயிற்சி அவசியம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

என்று குறிப்பிடுகின்றார். நாம் சுவாசிக்கக் காற்றில் 21 சதவீதம் உயிரியமும், 78 சதவீதம் நைட்ரஜனும், 1 சதவீதம் ஆர்கான் என்ற வாயுவும் உள்ளன என்று குறிப்பிடுகின்றார். வானில் பறக்க நினைப்போருக்கு விண்வெளியில் இவ்விகிதம் கலப்பதில்லை. அங்கு செல்ல இரத்தத்தில் வேகமாகக் கலக்கக்கூடிய பரிதியம் கலந்த உயிரியம் திரவ வடிவமாகப் பயன்படுகின்றது என்கின்றார். வானில் பயணம் செய்யும்போது இரத்த ஓட்டம் கால்களை நோக்கிப் பாயும் அப்போது தலையில் இரத்த ஓட்டம் குறைந்து மயக்கம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. அதற்கு இது போன்ற பயிற்சிகள் உறுதுணையாக அமையும் என்பதைப் பதிவிடுகின்றார்.

**புதுக்கவிதைகளின் போக்கு:**

இன்று சமுதாயத்தில் நடைபெறுகின்ற பல்வேறு பிரச்சனைகள், உண்மை நிகழ்வுகள், வாழ்வியல் எதார்த்தங்கள், என அனைத்தையும் இன்றைய புதுக்கவிதைகள் வெளிக்கொணர்கின்றன.

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையினானே (நன்னூல், நூ. 426)**

பவணந்தி முனிவரின் கூற்றிற்கு ஏற்ப புதுமையான இலக்கிய வகைகள் நாள்தோறும் புதுப்புது வடிவங்களுடன் உருவாகின்றன. இன்றைய புதுக்கவிதையின் இலக்கணத்தை,

> **சொற்சிக்கனம், பேச்சுப்பாங்கு, பேச்சமைதி, புதுமைப்படிமப் பயன்பாடு, தற்காலச் சொல்லாட்சி, உணர்ச்சிப்பாங்கு, தத்துவ நோக்கு, ஒலிநய அழுத்தம், உடனிகழ்கால உணர்வு, இன்றைய இக்கட்டான நிலை, இவற்றைத் தன் உள்ளடக்கத்துக்கும், உருவகத்திற்கும், பொருளாகவும், சாதனங்களாகவும் கொண்டு புதுக்குரலில் ஒலிப்பது தான் (தமிழ் இலக்கிய வரலாறு, ப. 328)**

எனப் புதுக்கவிதைக்கு வரையறை செய்கிறார் திரு.சி.சு. செல்லப்பா. புதுக்கவிதைகளைக் கவிஞர்கள் சொற்களால் உருவம் கொண்டு வடிவமைக்கின்றனர் எனப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். "நா.பார்த்தசாரதி மனிதனின் நாகரிகம் மொழி. மொழியின் நாகரிகம் இலக்கியம் இலக்கியத்தின் நாகரிகம் கவிதை என்றார்." (கவிதைப்பொருள், ப.67) என சிவம் சிவராசன் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து கவிதையின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. சுதந்திரத்தைத் தேவியாக உருவகித்து வந்த பாரதியின் கனவு இன்னும் விடியவே இல்லை என்பதை முத்துராமலிங்கம் எழுதிய கவிதையைச் சுட்டி சமூகத்தின் அடிமை நிலையை ந. சுப்புரெட்டியார் எடுத்துரைக்கின்றார்.

> **உயர்ந்த கவிதைகள் உயர்ந்த பொருளைத் தருவதோடு முடிவற்ற எல்லையில்லாத தன்மைகளைக் கொண்டு இயங்கும். அவை அறிவு, மகிழ்ச்சி, உணர்ச்சி ஆகியவற்றை மக்கள் சமுதாயத்திற்கு வாரிவழங்கவல்லன. (ஹைக்கூ கவிதைகளில் சமுதாயம், ப. 105)**

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

என்று கவிஞர் மித்ரா அவர்கள் கவிதையின் தன்மையை எடுத்துரைக்கின்றதையும் நாம் காண முடிகின்றது. இன்று சுதந்திரத்தைப் பற்றிப் பல புதுக்கவிதைகள் பேசுகின்றன.

இரவில் வாங்கினோம் இன்னும் விடியவே இல்லை என்று சுதந்திரத்தைப்பற்றி பல புதுக்கவிதைகள் பேசுகின்றன. இதற்கு அடிப்படை பிறரிடம் அன்பு காட்டாமையே ஆகும்.

**அன்பு நெறியே இறைவனின் நெறியாகும் இந்த அன்பானது தன்னை மேற்கொள்பவர்களிடம் கருணை, தன்னலமின்மை, கடமை உணர்வு, இன்னாசெய்யாமை, வெகுளி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்ற நற்பண்புகளை வளர்கிறது (தமிழ் இலக்கியங்களில் இறைநெறிகள், ப. 364)**

என ந.ஜெயசுதா அன்பே அனைத்திற்கும் அடிப்படை ஆகின்றது எனச் சுட்டியுள்ளார். காதலை அறிவியல் கருத்துக்களோடு ஒப்பிட்டு விளக்கும் போது அதனை ந.சுப்புரெட்டியார் ஏற்கின்றார். சங்ககாலத்தில் பரத்தையர் என்று சொல்லப்பட்டவர்கள் தற்போது விலைமகளிராக இருப்பதைக் கூறி அவர்களின் துயரத்தை விளக்குகின்றார். மாணவர்கள், ஆசிரியர்கள், வசதி படைத்தோர். வசதியற்றோர் என இவர்களிடையே தாண்டவமாடும் ஒரு சமுதாய நோய் இது என்று சமூகத்தின் இழிவை எடுத்துரைக்கின்றார்.

**நாங்கள் நிர்வாணத்தை**
**விற்பனை செய்கிறோம்**
**ஆடை வாங்குவதற்காக (தமிழ் இலக்கிய வரலாறு, ப. 323)**

நா.காமராசன் அப்பெண்களின் வறுமை நிலையை எடுத்துரைக்கின்றார். கல்வி நிலையத்தின் தற்காலப் போக்கு, குடிப்பழக்கம், அரசியல் எனப் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தமது நூலில் விளக்குகின்றார்.

**வரலாறு**

வரலாற்றில் நம்பகமான சுவையான செய்திகள் எழுதுவது உயிர் நாடியாக அமைகின்றது. பொதுவாக வரலாறு என்பதை வரல் + ஆறு, வரல் - வந்த, ஆறு - வழி என வரிசையாக வந்தவர்களின் பாதையை எடுத்துக்கூறுவது எனப் பொதுவாகச் சுட்டுவர்.

**ஒருவன் வாழும் காலமே அவனை பாதித்துச் சூழலை வெல்லவும் இல்லாவிடில் சோதியில் கலக்கவும் செய்கிறது. புனலோடும் வழியில் புல் சாய்ந்தாற் போல காலவெல்லத்தோடு சேர்ந்து ஓடுவோரே பலராயினும் எதிர் நீச்சலிட்டுக் கரையேறும் சிலராலேயே இவ்வுலகம் வாழ்கிறதுஉலர்கிறது" (பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம், ப. 81)**

என்று த.கீதாஞ்சலி தம் கட்டுரையில் அவர்கள் குறிப்பிடுகின்றார். ஆக ஒருவனின் செயலில் தைரியமும், தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும் அப்பொழுது தான் சமூகத்தில் அவர் உயர்வடைவான் என்பதை இங்குஅறிய முடிகிறது. அதற்கு அவன் சாதிக்க வேண்டும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

வரலாற்றில் இடம் பெற வேண்டும். ஒரு காலத்தில் வரலாறு என்றால் அது நாட்டு வரலாறு என்று மட்டுமே இருந்தது. அதன் நிலை இன்று மாற்றம் பெற்று விட்டது. தன்வரலாறு, வாழ்க்கை வரலாறு, மொழிவரலாறு, இலக்கியவரலாறு, அறிவியல் வரலாறு, நாட்டுவரலாறு என இதனுடைய பயணம் நீண்ட வரிசையில் இடம்பெறுகிறது. உதாரணத்திற்கு தன் வரலாறு எழுதுவோர் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள், தம் பொது வாழ்வில் சந்தித்த சிக்கல்கள், அவற்றில் தாம் அடைந்த வெற்றி, தோல்விகள், தன் வாழ்வில் தனிப்பட்ட முறையில் செய்த நற்பணிகள், போன்றவற்றைச் சுவைபடக் கூற வேண்டும். தான் செய்த தவறுகளும், அவற்றைத் திருத்திக் கொண்ட முறைகளும், வருங்கால மக்களுக்குப் பயன்படுமாறு கூற வேண்டும் என்பதை இவர் பதிவு செய்கின்றார். உ.வே.சாமிநாதையரின் என் சரித்திரத்தை நினைவுகூர்ந்து அதில் இடம் பெற்றுள்ள சில காட்சிகளை நம் கண் முன் கொண்டு வருகின்றார். ஆனால் எல்லோருக்கும் தன் வரலாறு எழுத இடம், பொருள், ஏவல் சரிப்பட்டு வருவதில்லை என்கின்றார். வாழ்க்கை வரலாற்றில் பல நூல்கள் மன நிறைவு இல்லாததைச் சுட்டி உ.வே.சாவின் ‘திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்’என்னும் நூல் மட்டுமே நன் முறையில் அமைந்திருப்பதை விளக்குகின்றார்.மொழி வரலாற்றில் பரிதிமாற்கலைஞரின் தமிழ்மொழிவரலாறும், மு.வரதராசனாரின் மொழிவரலாறும் சிறப்புடைய நூல்களாக இடம் பெற்றிருப்பதைச் சுட்டுகின்றார். இத்துறை இன்று மொழித்துறை என்ற பெயரில் கல்வி நிலையங்களில் ஒரு துறையாக வளர்ச்சி பெற்று இருப்பது தனிச்சிறப்பு ஆகும். இலக்கிய வரலாறு எழுதுவோர் விருப்பு வெறுப்பின்றி, பொது நோக்குடன் ஆராய்ச்சி செய்து பல நூல்களை உருவாக்க வேண்டும் எனக்கூறுகின்றார். அறிவியல் வரலாறு மிக மிக இன்றியமையாதது. மூடநம்பிக்கையில் இருந்து தோன்றி இன்றைய பகுத்தறிவு இயக்கம் வரை வளர்ந்த வரலாற்றை அறிவியல் வரலாற்றில் காட்ட வேண்டும். ஆய்வுப்பாதையில் கண்ட பல்வேறு இடர்கள் குறித்தும் கூறலாம் என்றும் இதில் குறிப்பிடுகின்றார். நாட்டு வரலாற்றில் ஆட்சிமுறை, மக்களின் வாழ்வியல் நிலை, கல்வி நிலை, சமயநிலை, போன்றவை அமைய வேண்டும்எனக் கூறுகின்றார். கோ.ம. இராமச்சந்திரன் செட்டியார் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு கொங்கு நாட்டை அறிவதற்கான சிறந்த நூலாக இடம் பெற்றுள்ளதை நாம் அறியலாம். வரலாற்றை எழுதுவதுபோல் இன்று உலக நாடுகள் மட்டுமின்றி தேசத்திற்குள்ளாகவே பல இடங்களுக்குச் சென்று வந்தவர்கள் பயண அனுபவங்களை இலக்கியங்களாகப் படைக்கின்ற தன்மை பயண இலக்கியத்திற்கு இன்று வழி வகுத்துள்ளதை நாம் காண முடிகின்றது.

**முடிவுரை**

இந்நூலில் பல்வேறு இலக்கியங்களின் சுவைகள் சிறப்புறப் பொருந்தி இருப்பதைக் காணமுடிகின்றது. பலாப்பழம் வெளியே முள்ளாய் இருப்பினும் உள்ளே உள்ள அதன் சுளை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

தேனாய்த் தித்திப்பது போல இவரது கருத்துக்கள் விளங்குகின்றன. அறிவியல் நாட்டம், கவிப்புலம் என எதனையும் ஆழ்ந்து சிந்திக்கும் புலப்பாடு இவரிடம் காணப்படுகிறது. எத்துறை ஆயினும் அதனை முழுமையாக ஆய்ந்து சொல்லும் ஈடுபாடு ந.சுப்புரெட்டியாரின் படைப்புகளில் அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

**குறிப்புநூல்கள்**

[1] க. ஆனந்தராஜன். *போதி பன்னாட்டு ஆய்விதழ்.* குறிஞ்சித் தமிழ் பண்பாட்டு ஆய்வு மையம், மதுரை, மு.ப. 2021.

[2] இராமலிங்கஅடிகள். *திருவருட்பா திரட்டு.* சமரச சுத்த சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், மு.ப.1982.

[3] கல்பனாதாசன். (தொ.ஆ) *பாரதிதாசன் பாடல்கள்.* பாவை பிரிண்டர்ஸ், சென்னை-14, 2000.

[4] கழகப்புலவர்குழுவினர். *நன்னூல் காண்டிகையுரை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, மு.ப.1982.

[5] முனைவர் த. கீதாஞ்சலி. (ப.ஆ) *பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்.* நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி. பொள்ளாச்சி, முதற்பதிப்பு, 2018.

[6] எஸ். குமார். *சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்.* அறிவுப்பதிப்பகம், சென்னை, இ.ப. 2010.

[7] ம. சந்திரமதி. (ப.ஆ) *பாரதியார் கவிதைகள்.* லியோ புக் பப்ளிசர்ஸ், சென்னை, மு.ப.2004.

[8] முனைவர். ச. செந்தில்குமார். (ப.ஆ) *கற்பித்தலில் புதிய உத்திகள்,* இராஜா பதிப்பகம், திருச்சி, இ.ப. 2019.

[9] முனைவர், தி.செல்வநாயகி. *வெற்றியை நோக்கி.* நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2001.

[10] தொல்காப்பியம். *ச.வே. சுப்பிரமணியன்.* மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, நான்காம் பதிப்பு. 18.

[11] டாக்டர். நல்லி குப்புசாமி செட்டியார். *வள்ளுவர் வகுத்த வாணிபம்.* பிரைன் பார்க், சென்னை, முதல்பதிப்பு, 2001.

[12] பொன்மணி. *இலக்கியம் விமர்சன சிந்தனைகள்.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, மு.ப. 17.

[13] நா. மகாலிங்கம். *தேசிய இலக்கியம் திருக்குறள்.* ஓம் சக்தி இதழ், கோவை, மு.ப.2004.

[14] கவிஞர் மித்ரா. *தமிழ் நேற்றும் இன்றும்.* அன்பு நிலா பதிப்பகம், அம்மையப்பட்டு, வந்தவாசி,மு.ப. 2003.

[15] சு.முத்து. *கவிதைகளில் அறிவியல்.* நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. 2001.

[16] மு.வரதராசனார். *திருக்குறள் தெளிவுரை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 1, November 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

நூற்பதிப்புக்கழகம், சென்னை, மு. ப.1959.

[17] கா. வாசுதேவன். *தமிழ் இலக்கிய வரலாறு*. தேவன் பதிப்பகம், திருச்சி – 620005.

[18] முனைவர். இரா. விஷ்ணுப்பிரியா. (ப.ஆ) *தமிழிலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்.* இராஜா பதிப்பகம், திருச்சி ,மு.ப. 2019.

[19] வீரபாண்டியன். *வலசை, பொன்விழா ஹைக்கூ*. வள்ளி பதிப்பகம், செய்யாறு, 1998.

[20] *கம்பராமாயணம்.* கம்பன்அறநிலை, மணி மேல்நிலைப்பள்ளி வளாகம், கோயமுத்தூர்.

[21] ந.ஜெயசுதா. (ப.ஆ) *தமிழ் இலக்கியங்களில் இறைநெறிகள்.* நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, மு.ப. 2018.

[22] https://ta.quora.com 21 டிசம்பர் 2018 அன்று அணுகப்பட்டது.

[23] https://ta.m.wikipedia.org 21 டிசம்பர் 2018 அன்று அணுகப்பட்டது.

**References**

[1] K. Anandarajan. *Bodhi International. Journal*. Kurinji Center for Tamil Cultural Studies, Madurai, 2021.
[2] Ramalinga Adikal. *Accumulate Thiruvarutpa*. Samarasa Sutta Sanmarka Research Institute, Vadalore, 1982.
[3] Kalpanathasan. *Bhrathithasan Poetry*. Paavai Printers, Chennai - 14, 2000.
[4] Kalagappulavar. Kuluvinar. *Nannool.kandigai urai.* Thirunelvalli Thennindia Saiva Sithantha Nurpathippu Kazhagam, 1982.
[5] Dr. T. Geethanjali. (Editor) *Tamil literature from a multifaceted perspective*. Nallamuthu Gounder Mahalingam College. Pollachi – 642 001, First Edition, 2018.
[6] S. Kumar. *Swami Vivekanandarin Ponmozhikal*. Aarivu Publications, Chennai - 2010.
[7] M. Santhiramathi. *Bhrathiyar Poetry*. Liyo Book Publications, Chennai, 2004.
[8] Dr. S. Senthil Kumar. (Editor) *New Strategies in Teaching.* Raja Publishing House, Trichy, 2019.
[9] Dr. T. Selvanayaki. *Towards Success*. New Century Book House, Chennai - 600050, 2001.
[10] Tholkapiam. V. *Suppiramaniyam.* Manivasaham Pathippakam. Chennai – 18.
[11] Dr. Nalli Kuppusamy Chettiar. *Valluvar Vakutha Vanipam.* Brain Park, Chennai, First Edition, 2001.
[12] Bonmani. *Illakiya Vemarnana Sinthanikal*. Sri Shenbaga Publications, Chennai - 17.
[13] N. Mahalingam. *National literature Thirukkural*. Om Sakthi, Monthly Journal. Covai.
[14] Poet Mitra. *Tamil Yesterday and Today*. Anbu Nila Publishing House, Ammaiyapattu, Vandavasi - 604 408, 2003.
[15] S.Muthu. *Kavithaikalil Aaraviyal*. New Centuray Book House, Chennai, 2001.
[16] M.Varatharasanar. *Thirukkural Thelivurai*. Thirunelvalli Thennindia Saiva Siddantha Nurpathippu Kazhagam, Chennai, 1959.
[17] K.Vasudevan. *Tamil Illakiya Varalaru*. Devan Publications, Chennai – 620005.
[18] Dr. R. Vishnu Priya. (Editor) *Humanities in Tamil literature.* Raja Publishing House, Trichy – 620023, 2019.
[19] Veerapandian. *Walasay*. Golden Jubilee Haiku, Valli Publishing House, Seyyar, 1998.
[20] *Kambaramayanam*. Aayathiyakandam. Kamban Aarananilai, Manimel Nelai School, covai – 37.
[21] Dr. N.Jayasuda. (Editor) *Morals in Tamil literature.* Nallamuthu Gounder Mahalingam College, Pollachi – 642001, 2018.
[22] https://ta.quora.com Accessed on 21 December 2018.

**E-ISSN: 2581-7140** **UGC CARE Listed Journal**
**Volume - 5, Special Issue - 1, November 2022** **Available at: www.ijtlls.com**

[23] https://ta.m.wikipedia.org Accessed on 21 December 2018.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இத்தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கு வாய்ப்பளித்த ந. சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பேராசிரியர். சு. இராமலிங்கம் ஐயா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். / I would like to express my gratitude to Na. Subbu Reddiar 100 Educational Trust for the chance to write an article on this topic. I thank Prof. S. Ramalingam for rendering valuable suggestions.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.